
# பனை மரம்

BY

க. சோமசுந்தரப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




MAXIMUM OF
TWO(2) VOTES
(CROSSES "x") HERE.

2 வாக்கு மட்டும்
(2 புள்ளடி"X") இங்கே

உ

# பனைமரம்.

## POEM RELATING TO
# PALMYRAH PALM.



நவாலியூர், திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்
இயற்றியது.

*Published by*

**THE CEYLON PRODUCE MARKETING AGENCY**
**JAFFNA**

இலங்கை விளைபொருள் விற்பனையாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

தென்னிலங் காபுரிச் சென்னியி லேவளர்
தெய்வப் பனையின் சிறப்புரைக்கத்
தன்னிக ரில்லாத முன்னவன் றாமரைத்
தாளிரண் டுஞ்சரண் ஞானப்பெண்ணே. க

சீரா யொருபானை சோற்றுக் கொருசோறு
செம்பதம் பார்ப்பது போற்பனையில்
ஓரா யிரம்பய னுண்டா மவற்றினுள்
ஒன்றிரண்டு சொல்வேன் ஞானப்பெண்ணே. உ

அன்னையு மப்பனு மாகி யுயிர்களை
அன்புடன் காக்குங் கடவுளந்நாள்
மன்னுயிர் வாழ்வுறப் பல்வகை யாகிய
மரங்கள் படைத்தனன் ஞானப்பெண்ணே. ங

விண்ணுல கத்தினி லைந்து தருக்களை
வேண்டும் பொருடர வேபடைத்திம்
மண்ணுல கத்தினிற் றெய்வப் பனையொன்றை
வள்ள லருளினன் ஞானப்பெண்ணே. ச

நட்டா யிரமாண்டு பூமியி லேநின்று
நல்ல பயன்க ளுதவிடுமாம்
பட்டா யிரமாண்டு பாழடை யாதென்று
பழமொழி கூறுவர் ஞானப்பெண்ணே. ரு

## பனைப் பெயர்கள்.

கட்டைக் கறுப்பி கருங்குந்தி செங்குந்தி
காகக் கருப்பைச்சி பூமணத்தி
நெட்டைச் சிவப்பி சடைச்சிநாற் கண்ணிச்சி
நீண்ட குலைச்சியாம் ஞானப்பெண்ணே. சா

பிள்ளைக்குத் தாய்கொடாப் பெரியவா ழைக்காய்ச்சி
பெற்றிடு மாயிரங் காய்ச்சியுடன்
கொள்ளு நுரைச்சி நரைச்சிநற் றேரைச்சி
கூறுவ ரின்னமும் ஞானப்பெண்ணே. எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைஉண்டாக்குதல்.

கொத்திவெட்டி வேலி கட்டிப் பழுதிலாக்
கொட்டைகளை யேழு சாணுக்கொன்றாய்
பத்தி பத்தியாக மண்ணிற் புதைத்திடப்
பரவி முளைவரும் ஞானப்பெண்ணே. அ

மூடு படம்விரித் தாடுபாம் பைப்போல
முளைத்து வளரும் பருவமதில்
ஆடுமாடு தின்னு தோம்பி வளர்த்திடில்
ஆண்டுபத் திற்பயன் ஞானப்பெண்ணே. கூ

பெண்பிளை யும்பனை யும்பரி பக்குவம்
பேணி வளர்த்திடி லாண்டுபத்தில்
பண்புட னேபய னீந்திடு மென்றுமுற்
பாவலர் கூறினர் ஞானப்பெண்ணே. க௦

## பயன்கள்.

உருக்குவா ளேந்திப் பகைசெற் றுலகினை
ஓம்பும் மணிமுடி மன்னவன்போல்
கருக்குவா ளேந்திக் கலியை யழித்திந்தக்
காசினி யைக்காக்கும் ஞானப்பெண்ணே. கக

## கங்குமட்டை.

தங்குமட் டாய்வளர்ந் தேசரு காகிப்பின்
தானே கழன்று சரிந்துவிழும்
கங்குமட் டைகூடத் தும்பாய் விறகாகிக்
கைப்பொருள் தந்திடும் ஞானப்பெண்ணே. க௨

## ஓலை.

வீடுகள் வேய்ந்திட வேலி யடைத்திட
விசிறிகள் செய்யக் குடில்வரிய
மாடுக ளுக்குண வாகவைக் கான்செய
வள்ளப் பிழாவுமாம் ஞானப்பெண்ணே. கங

வார்ந்திட்ட சட்டங்க ளொன்றின்மே லொன்றாக
வைத்தடுக் கிப்பின் வரிந்துசெய்த
தேர்ந்திட்ட மள்ளர் தலைப்பாகை போலெந்தத்
தேசத்தி லேயுண்டு ஞானப்பெண்ணே. கச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓலைச் சருகு.

வாரி விளையா வயற்கெரு வாகவே
வற்றற் சருகினைத் தூவிவிட்டால்
வீரிய மாகவே செந்நெல் விளைந்திடும்
வேறும் பயிர்வரும் ஞானப்பெண்ணே. க௫

### மட்டை.

வலிய கருக்கொடு நாருந் தரும்மட்டை
வரிச்சுக் குதவும் நெசவுசெயும்
எலிகளுக் கேற்றி யமுக்கிப் பிடித்திடும்
இடார்ப்பொறி செய்யலாம் ஞானப்பெண்ணே. க௬

### நார்.

கட்ட வுதவிடும் கண்ணி கயிறுநாற்
காலிகள் கூடைகள் பின்னிடலாம்
மட்டை யுதவிடும் நாரினு லின்னமும்
வாய்க்கும் பொருள்பல ஞானப்பெண்ணே. க௭

### ஈர்க்கு.

சட்டிபா னையேறி யாடுமு றிவகை
தக்கவீர் வாணிகள் தட்டுவகை
கொட்டிப் புடைக்கும் சுளகிவை யீர்க்கினிற்
குல்லாவுஞ் செய்யலாம் ஞானப்பெண்ணே. க௮

### ஓலைச்சட்டம்.

ஐந்து வயதினிற் கையி லெடுக்கின்ற
அரிவரி யேடு முதலாக
முந்து பலகலை யாகம மோலையில்
முன்ன மெழுதினர் ஞானப்பெண்ணே. க௯

### ஓலைச்சார்வு.

பன்னத்தா லுண்டாகு மெல்லாப் பொருளையும்
பன்ன முடியுமோ பல்வகையாம்
வன்னப்பெட் டிகூடை பாய்கட கமுமல்
மற்று மனந்தமாம் ஞானப்பெண்ணே. ௨௦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓலைப்போல்லு.

வட்டமாக வெட்டி நடுவே துளைசெய்து
வளையாத கம்பியிற் கோத்திறுக்கித்
இட்டமா கச்சீவிச் செய்தவோ லைப்பொல்லுத்
தேடக் கிடையாது ஞானப்பெண்ணே. ௨௧

### குருத்து.

சாற்றும் பனையின் குருத்தினை முற்றமுன்
தானெடுத்து வெட்டி யுண்பவர்க்குப்
போற்றுங் குடரினிற் குத்துங் கிருமிகள்
போயகலு மென்பர் ஞானப்பெண்ணே. ௨௨

### பாளை வருதல்.

ஆக்க மளிக்கப் படைத்திட்ட மங்கல
மான பனைபய னீவதற்குக்
காக்கையின் மூக்குப்போல் கார்த்திகை மாதத்தில்
கருக்கொள்ளு மென்றனர் ஞானப்பெண்ணே ௨௩

### குரும்பை.

பம்பிய பாளை வெளிவந்து பைப்பயப்
பற்றுங் குரும்பைக ளிற்பலவும்
வெம்பி விழுமெடுத் தாவின் பசிகெட
வெட்டிவைத் தால்நன்மை ஞானப்பெண்ணே. ௨௪

### நுங்கு.

மங்கல மாமணப் பந்தரிற் றோரண
வாயிலி லேமகிழ் வாகவைக்கும்
நுங்கின் சுவையினை யுண்டறிவ தன்றி
நுவல முடியுமோ ஞானப்பெண்ணே. ௨௫

கண்ட வுடனேவா யூறி யினித்திடும்
கற்கண்டோ! தேனோ! நறும்பாகோ!
அண்டர்கள் நுங்கினை யுண்டறிந் தால்முன்னே
அமுதங் கடைந்திடார் ஞானப்பெண்ணே ௨௬

### சார்வாய்.

சீராக முற்றுத தாலக் கனியினைச்
சீவிப் பருப்பொடு தேங்காயின்பால்
நேராக வுப்பிட் டவித்துண மற்றதை
நிகரான தெங்குண்டு ஞானப்பெண்ணே. ௨௭

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனம்பழம்.

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும்
தென்னவனு மௌவை சொற்படியே.
மங்கல மாயுண்ட தெய்வப் பனம்பழம்
மரியாதை யற்றதோ? ஞானப்பெண்ணே. ௨௮

கைப்புமுப் பும்போக நாலுமொன் றாகவே
கலந்து சுவைக்கும் பனம்பழத்தின்
துய்க்குஞ் சுவைக்கு நிகராக வேறொன்றைச்
சொல்ல முடியுமோ ஞானப்பெண்ணே. ௨௯

அந்தப் பனைதரும் நல்ல பழத்தினை
ஆராய்ந் தெடுத்துத் தழலிட்டே
வெந்த பதத்தினில் நீரிற் கழுவியே
மேற்றோலை நீக்குவர் ஞானப்பெண்ணே. ௩௦

கையாற் பிசைந்து கறந்து கறந்து
களியினை வாய்வைத் துறிஞ்சியுண்டால்
செய்தேன் திரட்சிப்பால் சீனி முதலிய
தித்திப்பென் றுண்ணாரே ஞானப்பெண்ணே. ௩௧

வாய்ச்சிட்ட கற்பக தாருவெ னும்பனை
மதுரப் பழத்தினை யாம்மறந்தே
ஈச்சம் பழத்திற்கு வாயூறிக் கைப்பொருள்
இழக்கின்ற வாறென்ன ஞானப்பெண்ணே. ௩௨

## பனாட்டு.

சுத்தத் தலத்திற் றொடைக்குமே லாகவே
தோன்றிடப் பந்தர் சமைத்துக்கொண்டே
வைத்த பழங்களைப் பட்டடை யிற்றட்டி
வாங்கிப் பிசைகுவர் ஞானப்பெண்ணே. ௩௩

கூறுஞ் சிறுதடி கூட்டியொன் றாய்க்கட்டிக்
குந்தைத் துழாவித் துழாவியெடுத்
தூறுங் களியினைச் சல்லாப் புடவையில்
ஊற்றி வடிப்பார்கள் ஞானப்பெண்ணே. ௩௪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுநா ளெட்டுக் களியிலினைப் பாயில்விட்
டிரவியிற் காயப் பரவியிறை
மட்டதா கத்தடித் துப்பத மாகவே
வந்தா லெடுப்பார்கள் ஞானப்பெண்ணே. ௧௫

உப்பும் பிரண்டையும் ஒக்க வதிற்றாவி
ஒவ்வொரு சானுக்குச் சாண்கீறி
தப்பாமற் றட்டை யகப்பையி னால்மெல்லத்
தட்டா யெடுப்பார்கள் ஞானப்பெண்ணே ௧௬

கூடையி லிட்டு மடித்துப் பரணிலே
கொண்டுவைத்துப் பின்ன ருண்டிடுவார்
பீடை கெடும்பசி போம்மலம் போமின்னும்
பெலனுமுண் டாமென்பர் ஞானப்பெண்ணே. ௧௭

உப்புப் புளிமிள காயுட னேவெள்ளை
உள்ளி மிளகு சமன்கூட்டித்
தப்பாம லம்மியி லிட்டரைந் தேதொட்டுச்
சாப்பிடல் நல்லது ஞானப்பெண்ணே. ௧௮

செங்கதி ரோன்சுடு மிந்தப் பலகாரம்
செய்துவைத் துத்தின்ன மாட்டாமல்
அங்கே பிறர்சமைத் திங்கே விடுமவைக்
காசைப்பட் டோமடி ஞானப்பெண்ணே. ௧௯

வேறு பயன்.

ஒடியல் கிழங்குபூ ரான்முத லாகிய
ஓரா யிரம்பய னுண்டிவற்றை
முடிய வுரைப்பது கூடாதோ ராயிரம்
முடியுடை யானுக்கும் ஞானப்பெண்ணே. ௨௰

ஊமல்.

செல்வர்க்கு மூக்கிடு தூளிடுஞ் செப்பாகும்
சித்த வயித்தியர்க் குக்குடுக்கை
கொல்லர்க்கு நூராக் குணக்கரி யாமென்று
கூறினு ரூமலும் ஞானப்பெண்ணே. ௨௧

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருப்ப நீர்.

இளையபாளை தட்டி முட்டிகட்டிச் சுண்ணம்
    ஏற்றி யெடுக்கின்ற வின்பநன்னீர்
தழையும் பனங்கட்டி சீனிகற் கண்டுகள்
    சமைக்க வுதவுமே ஞானப்பெண்ணே. ௪௨

## கள்ளு.

அளிக்குஞ் சுரபியின் பாலெனப் பாற்கடல்
    அமுதெனக் குடியர்கள் போற்றுங்கள்ளைப்
புளிக்குமுன் னுண்டிடில் பொல்லாப் பிணிபல
    போய்விடு மென்றனர் ஞானப்பெண்ணே. ௪௩

## பனையைப் பேணல்.

எட்டுநா றுவகை நற்பய னீகின்ற
    இன்பப் பனையை மறந்ததனால்
பட்டுக்கெட் டோமினிப் பாலித்துப் பேணியே
    பணமுட்டைத் தீர்க்குவம் ஞானப்பெண்ணே. ௪௪

விண்கண்ட தேவரு மாசைப்பட் டேவந்து
    வேண்டிநிற் கும்வியன் கற்பகத்தைக்
கண்கண்ட செல்வக் களஞ்சியம் நீயென்று
    கைதொழ வேண்டுமே ஞானப்பெண்ணே. ௪௫

## வாழ்த்து.

இல்வாழ்வுக் காகிய எல்லாப் பொருளையும்
    எங்களுக் கெப்பொழு துங்கொடுக்க
வல்ல பனையெங்கள் செந்தமிழ் நாட்டிலே
    வாழிய வாழிய ஞானப்பெண்ணே. ௪௬

கற்பக மேகாம தேனுவே யெங்களைக்
    காத்திடும் செல்வக் களஞ்சியமே
அற்புத மேயென்று போற்றுந் திருப்பனை
    அனவரதம் வாழி வாழியவே. ௪௭

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்—12-37.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

) )

ளவும்.

| |
|---|
| C ---- |
| Q ---- |
| D --- |
| G ---- |
| F ---- |
| R ---- |
| S ---- |

Two votes (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org